RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s22

OPEN ACCESS

# பாரதியும் அத்வைதமும்

சே. செந்தமிழ்ப்பாவை [அ, *]

[அ] தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா.

# Bharathi and Advaita

S. Senthamzil Pavai [a, *]

[a] Centre for Tamil Culture, Alagappa University, Karaikudi – 630003 Tamil Nadu, India.

* Corresponding Author: pavaisenthamizh@gmail.com

Received: 04-01-2021
Revised: 09-04-2021
Accepted: 14-04-2021
Published: 30-04-2021

Check for updates

## ABSTRACT

Bharati is the twentieth-century non-recipient. The English of India; During the year, poetry was written in the form of poetry, liberation, social liberation, and the unity of the people with regards to the separation of religions and religions. These songs, legends, myths, and philosophies were completely different and gave new meaning to various god ideas. Bharati, who is the best spiritual poet, has established himself as the Advaita Vedanta by placing himself in the words of the Gita, who sees the soul in all things and sees everything in the soul. The purpose of this article is to explain Bharati's Advaita principle. Gnanika Kavi Bharati, the principle of the best of the Naradharata Bharatam, has manifested himself as an Advaita Vedantic. One that is not two is Brahman. It has penetrated the universe and the cosmos, the myths and the lives. Hiding this state of affairs is a delusion, a world, and a trap. The conqueror of illusion; Bharati's Advaita principle is that Jeevanmukthan is. It is the clear thought of Bharatiya. He emphasizes oneness among many deities. Bharatiya had a great sense of unity within the religion. That is why the rule of Brahman in the soil and sky is the realization of the sovereignty of Brahman in the Panchabhutas. Realizing that the sovereignty of the Brahman is frozen in all life, the poet realizes that the Brahman is also in the Paramatma jivatmas. Bharatiya illuminating the Advaita light is illusory. She refuses to fear death. He cautioned against the possibility of differences due to the illusion of inner turmoil. Your business is here to love people in an effort to inspire them! This is the way to see the differences; The Advaita Principle of Bharati is that humanity will excel if everyone has the sense of "I am everything".

**Keywords:** Poetry, Liberation, Social Liberation and the Unity of the People.

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் ஈடுஇணையற்ற இன்தமிழ்க்கவிஞன் பாரதி. இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்டு கொண்டிருந்த காலகட்டத்தில் கவிதை எழுதப் புகுந்த பாரதி நாட்டு விடுதலை, சமூகவிடுதலை போன்றவற்றிற்குக் குரல்கொடுத்ததோடு மக்களை மதங்கள் பிரித்தாளும் நிலைப்பாட்டினைக் கண்டு உள்ளம் வருந்தி மக்களை இணைக்க அன்றைய காலகட்டத்தில் மக்கள் தம் வழிபாட்டில் இருந்த பெருந்தெய்வங்கள், சிறுதெய்வங்கள், புத்தர்பிரான், இயேசு, அல்லா என எல்லாக்கடவுளர்களையும் பாடிச் சிறப்பித்தார். இப்பாடல்கள், புராணங்கள், தொன்மங்கள், மெய்யியற்கதைகள் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டு பல்வேறு கடவுட் சிந்தனைகளுக்குப் புதிய வடிவம் நல்கியது. இங்ஙனம் சிறந்த

ஆன்மிகக் கவியாக விளங்கிய பாரதி எவன் எல்லாப் பொருள்களிலும் ஆத்மாவையும் ஆத்மாவில் எல்லாப் பொருள்களையும் பார்க்கிறானோ அவனே காட்சியுடையான் என்னும் கீதையின் வாக்கினைத் தனக்குள் நிலைநிறுத்தித் தன்னை அத்வைத வேதாந்தியாகவும் வெளிப்படுத்தியுள்ளான். அவ்வகையில் பாரதியின் அத்வைதக் கொள்கை குறித்து இக்கட்டுரை விளக்குகிறது இவ்வுரையின் நோக்கமாகும்.

## அத்வைதம் என்பது

அத்வைதம் - அ ௗ துவைதம் எனப் பிரித்து இரண்டற்றது எனப்பொருள்படும். அ - அற்றது துவைதம் - இரண்டு, இரண்டற்றதாக நிற்பது ஒன்றே. அதாவது அகம் பிரமாஸ்மி - என்பதாகும். அத்வைத மதக் கொள்கையானது பிரம்மம் என்ற ஒருபொருளே உள்ளது. ஜீவர்கள் (மனிதர்கள்) பிரம்மமே ஆவர் என்பதாகும். ஒரு சூரியன் பல குட நீர்களில் தோன்றுவது போலவும் ஓர் உருவம் பல கண்ணாடிகளில் பிரதிபலிப்பது போலவும் ஒரு பிரமமேயாவற்றிலும் விளங்கி நிற்கிறது எனும் தத்துவத்தை உள்ளடக்கியது. இதுவே அத்வைதத்தின் மையக்கருத்தாகும் (Lakshmanan, 2012). பஞ்சபூதங்களாக உள்ள பிரம்மமே நம் ஐம்புலன்களாகவும் உள்ளமாகவும் உயிராகவும் இருக்கிறது. பிரம்மமே பலவித மனிதர்களாகவும் உயிரினங்களாகவும் பிரதிபலித்து வேறு வேறு என்கிற எண்ணத்தை உண்டாக்குகிறது என்னும் அத்வைதக் கருத்தைப் பாரதி தம் பாடல்களில் பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.

## ஜீவாத்மா

களிமண்ணிலிருந்து பலவகையான பாத்திரங்கள் செய்யலாம். அவைகளுக்குப் பெயர், வடிவம், பயன் போன்றவைகளும் குறிக்கப் பெறலாம். இப்பாத்திரங்கள் செய்யப்படுவதற்கு முன் களிமண்தான் இருந்தது. பானைகளாகிய பாத்திரங்களை உடைத்தால் இறுதியில் மிஞ்சுவது களிமண்தான். அதுபோல பிரம்மத்திலிருந்து வந்தவைகளே ஜீவாத்மாக்கள். இறுதியில் பிரம்மத்தோடு ஐக்கியமாகப் போகிறவைகள் என்பதும் அத்வைதக் கருத்தாகும்.

## பிரம்ம உண்மை - ஒருமை

‘அறிவே தெய்வம்’ என்ற கவிதைத் தலைப்பில் பாரதியார்

ஒன்று பிரம் முளதுண்மை யஃதுன்

உணர்வெனும் வேதமெலாம் - என்றும்

ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்

உணர்வெனக் கொள்வாய்!

என்று பாடுகிறார். இதில் ‘உள்ள ஒன்று’ என்பது அத்வைதம் குறிப்பிடும் பிரம்மத்தைக் குறிக்கும். தெய்வங்கள் உருவத்திலும் பெயரிலும் பலப்பல இருக்கின்றன. இவரே பல தெய்வங்களையும் பாடியிருக்கிறார் (Bharathiar, 1997). எனினும்

ஆயிரந்; தெய்வங்கள் உண்டென்று தேடி

அலையும் அறிவிலிகாள் - பல்

லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுன்

டாமெனல் கேளீரோ?”

எனப் பாடுவதன் வழி ‘அறிவே தெய்வம் என்பார் (Bharathiar, 1997). அவ்வறிவு பிரம்மம் சார்ந்ததாகும்.

## மாயை

அனைத்திலும் இறைவன் நிறைந்திருக்கும் உண்மையை மறைப்பது மாயையாகும். அத்தகு மாயையை ஞானப் பாடல்களில் பாரதியார் பழித்துப் பாடுகிறார்.

உண்மை யறிந்தவர் உன்னைக் கணிப்பாரோ

மாயையே - மனத்

திண்மையுள்ளாரை நீ செய்வது

மொன்றுண்டோ - மாயையே"

சித்தம் தெளிவெனும் தீயின் முன் எத்தனை கோடிப் படைகொண்டு வந்தாலும் மாயை என் செய்யும்? என உறுதிபடப் பேசுகிறார் (Bharathiar, 1997).

சாவைப் பற்றிய கவலையை உண்டாக்குவது மாயை, உண்மையில் உயிராகிய ஆத்மா அழிவற்றதாகும். உயிரைத் தாங்கியிருக்கும் உடல் அழிவுறும். இத்தெளிவுடன்,

சாகத் துணியிற் சமுத்திர எம்பட்டு

மாயையே! - இந்தத்

தேகம் பொய் என்றுணர் தீரரை யென்

செய்வாய்! - மாயையே!"

தெளிந்து ஒருமை (பிரம்மம்) கண்டபின் இருமை காட்டும் மாயைக்கு என்ன வேலை? என்று வினவுபவர் மாயை தரும் இன்பம் - நாய் தரக் கொள்ளுமா சிங்கம் என்ற வினவிச் சிந்திக்க வைக்கிறார் (Bharathiar, 1997). பாடலின் இறுதியில்,

யார்க்கும் குடியல்லேன் யானென்ப

தேர்ந்தனன் மாயையே - உன்றன்

போர்க்கஞ்சு வேனோ பொடியாக்குவேன்

உன்னை - மாயையே!"

என்று பாடுமிடத்தில் சிந்தனைத் தெளிவுபெற்ற பாரதியின் உறுதியைப் பார்க்க முடிகிறது (Bharathiar, 1997).

காலனுக்கு உரைப்பதாக அமையும் சங்கு என்னும் பாடலில்,

"பொய்யுறு மாயையைப் பொய்யெனக் கொண்டு

புலன்களை வெட்டிப் புறத்தில் எறிந்தே

ஐயுற வின்றிக் களித்திருப் பாரவர்

ஆரிய ராமென்றங் கூதேடா சங்கம்

என்று கொக்கரிக்கிறார்(Bharathiar, 1997).

'தெய்வம் ஒன்று' எங்கும் எவ்வுயிரிலும் அத்தெய்வம் மறைந்திருக்கிறது என்பதை மறைப்பது, மறக்கச் செய்வது மாயை. மாயைதான் உள்ளக் குலைவிற்குக் காரணியாகிறது. உள்ளக்குலைவிற்கு இடமளித்தால் சாதிச்சண்டையும் சமயச் சண்டையும் சுரண்டல்களும் அச்சுறுத்தல்களும் நிகழுகின்றன. அதனைத் தடுக்க அத்வைதியாகி

"உள்ளதெலாம் ஓர்உயிர் என்று தேர்ந்தபின்

உள்ளம் குலைவதொன்றோ - மனமே

வெள்ளமென மொழி தண்ணருள் ஆழ்ந்தபின்

வேதனை யுண்டோடா?"

எனப் பாடுகிறார் பாரதியார் (Bharathiar, 1997).

ஆன்ம ஒளியில் திளைப்பவர்களுக்கு அச்சமில்லை. ஆகையால்தான் பாரதியார். 'அச்சமில்லை அச்சமில்லை' என்று துணிந்து காப்பதோடு

"அன்பென்று கொட்டு முரசே - மக்கள்

அத்தனை பேரும் நிகராம்

இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு

யாவரும் ஒன்றென்று கொண்டால்"

என்று ஆன்ம நேயம் தேடுகிறார் (Bharathiar, 1997).

## மாயை உலகம்

உலகம் பற்றிப் பாரதியாரும் பொய்யோ மெய்யோ? என்ற வினாவை முன் வைக்கிறார். நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம் சொப்பனந்தானோ? பல தோற்றமயக்கங்களோ? கற்பதுமே கேட்பதுவே கருதுவதே நீங்களெல்லாம் அற்பமானவைகளோ? உம்முள் ஆழந்த பொருள் இல்லையோ? நான், ஞாலம், காலம், காட்சி, கோலம், குணங்கள், சோலை, மரங்கள் இவை யாவும் மாயை சார்ந்த பொய்கள்தானா?

காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்த வெல்லாம் காண்ப மன்றோ? வீண்படு பொய்யிலே-நித்தம் விதி தொடர்ந்திடுமோ காண்பதுவே உறுதிகண்டோம் காண்பதெல்லாம் உறுதியில்லை காண்பது சக்தியாம்-இந்தக் காட்சி சத்தியமாம்" என்று குறிப்பிடுகிறார் (Bharathiar, 1997).

மாயைத் தத்துவத்தில் உலகம் பொய்; காண்கின்ற பொருள் எப்படிப் பொய்யாகும் எனச் சிந்திக்க வைத்து, காண்பதைப் பொருள் என நோக்காமல் சக்தி எனநோக்கும்படிப் பாடுகிறார் பாரதியார்.

## ஜீவன்முக்தன் பாரதி

'அத்வைத் சிந்தனை' யை முழுமையாகப்பெற்ற பாரதியார் ஒரு ஜீவன் முக்தனாகத் திகழ்கிறார் பார்க்கின்ற பொருள் அனைத்திலும் 'நான் என்கிற நோக்கு அவருக்கு வந்துற்றது (Mahadevan, 1954; Sir Jayendra Saraswathi Swamigal, 1982).

ஞானமே உருவாயும் ஆகாயத்தைப் போல மேலானதாயும் எப்பொழுதும் ஒரே ஒளியாயும பிரபஞ்சம் ஒன்றாயும் அழிவற்று, வியாபதமாயும் இரண்டற்றதாயும் எது உளதோ? அதுவே 'நான்' அவனே முக்தன் நான் என்கிற அனுபவ பேற்றினைப் பெற்ற பாரதி அதனால் தான் உலகத்தில் உள்ள ஜீவன்களிடம் இருக்கும் அஞ்ஞானத்தை அகற்றுவதைத் தம் முதன்மைப் பணியாகக் கொண்டார். இதனை "வானில் பறக்கின்ற புள் மண்ணில் திரியும் விலங்கு, கானில் வளரும் மரம், காற்று, புனல், கடல், விண்ணில் தெரிகின்ற மீன், வெட்டவெளி, மண்ணில் உள்ள புழு, வாரியிலுள்ள உயிரெல்லாம் நான்" என்று

அண்டங்கள் யாவையும் ஆக்கினோன் நான்

அவை பிழை யாமே சுழற்றுவோன்நான்

கண்டநற் சக்திக் கணமெலாம் நான்

காரணமாகிக் கதித்துள்ளோன் நான்

நானெனும் பொய்யை நடத்துவோன் நான்

ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்

ஆனபொருள்கள் அனைத்திலும் ஒன்றாய்

அறிவாய் விளங்கு முதற்சோதி நான்"

என்று 'அனைத்திலும் நான்' என்ற உணர்வைப் பெற்ற பாரதியார் ஒரு ஜீவன் முக்தன் என உணரலாம் (Bharathiar, 1997). அவரிடம் ஆன்மஒளி இலங்குவதை அவரே பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஆன்ம ஒளிக்கடல் மூழ்கித் திளைப்பவர்க்

கச்ச முண்டோ? - மனமே!

தேன்மடையிங்கு திறந்ததுகண்டு

தேக்கித் திரிவமடா"

என்று 'ஆன்மஒளி' பெற்றதைக் குறிப்பிடுவதிலிருந்து அவர் ஒரு ஜீவன்முக்தன் என்பது பெறப்படும் (Bharathiar, 1997).

## முடிவுரை

பாருக்குள்ளே ஞானத்தால் சிறந்தநாடு பாரதம் என்னும் கொள்கையுடைய ஞானக்கவி பாரதி, அத்வைத வேதாந்தியாகத் தன்னைப் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். இரண்டு அற்ற ஒன்று பிரம்மம் ஆகும். அதுவே அண்டத்திலும் அகண்டத்திலும் ஐம்பூதங்களிலும் உயிர்களிலும் ஊடுருவியிருக்கிறது. இந்நிலையை மறைப்பது மாயை, உலகம், மாயை வலையில் சிக்குண்டுள்ளது. மாயையை வென்றவன் ஜீவன்முக்தன் ஆகிறான் என்பது பாரதியின் அத்வைதக் கொள்கையாகும்.

'பிரம்ம உண்மை' பாரதியாரின் தெளிந்த சிந்தனையாகும். பல தெய்வங்களுள் ஒருமையை வலியுறுத்துகிறார். சமயங்களுக்குள்ளேயே ஒருமையைப் பார்க்கிற அத்வைத மேன்மை பாரதியாருக்கு இருந்தது. அதனால் தான் பஞ்சபூதங்களுக்குள் பிரம்மம் என்னும் இறைமை இருப்பதை உணர்ந்து மண்ணிலும் விண்ணிலும் பிரம்மத்தின் ஆட்சி என்கிறார். எல்லா உயிர்களிலும் பிரம்மம் ஆகிய இறைமை உறைந்திருப்பதை உணர்ந்த கவிஞர் பிரம்மம் என்கிற பரமாத்மா ஜீவாத்மாக்களிலும் இருக்கிறது என்பதை உணர்ந்து பாடுகிறார்.

அத்வைத ஒளியில் திளைக்கும் பாரதியார் மாயையைத் துச்சமாகக் கருதுகிறார். சாவைக் கண்டு அஞ்ச மறுக்கிறார். உள்ளக்குலைவிற்கு மாயை காரணமாக அமைவதால் வேறுபாடுகள் தோன்றுவதை எச்சரிக்கிறார். மக்களிடம் அஞ்ஞானத்தைக் களையும் முயற்சியாக உங்களுக்குத் தொழில் இங்கு அன்பு செய்வதே! இதுவே வேறுபாடுகளைக் களையும் வழி "அனைத்திலும் நான்" என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் இருந்தால் மனிதகுலம் மேன்மையுறும் என்பதே பாரதியின் அத்வைதக் கொள்கையாக விளங்குகிறது.

## References


Bharathiar, (1997) Bharathiar Kavithaigal, Manivasagar Pathippagam, Chennai, India.

Lakshmanan, K., (2012) Indian Philosophy, Palaniyappa Brothers, Chennai, India.

Mahadevan, P., (1954) Hindu Religious Philosophy (Translator-Raja bahadur), Tamil Publishing Corporation, Chennai, India

Sir Jayendra Saraswathi Swamigal., (1982) Adi Shankarar history, Kanchi Samakodi Peedam, Kanchipuram, India


**Funding:** NIL

**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License